# அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபன வெற்றிடங்கள் 2026

**அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனமானது, நன்கு நிறுவப்பட்ட வருவாய் ஈட்டும் வர்த்தக அச்சிடுதல், பாதுகாப்பு அச்சிடுதல், வெளியீடு மற்றும் எழுதுபொருள் தயாரிப்பு மற்றும் சந்தைப்படுத்தலில் ஈடுபடும் வர்த்தக நிறுவனமாக உள்ளது. அது பின்வரும் வெற்றிடங்களுக்காக சிறந்த தளப் பதிவுளைப் பெற்ற சுறுசுறுப்பான மற்றும் இலக்குகளை அடைவதில் அவதானம் செலுத்தும் இலங்கையர்களை தேடுகிறது.**

STATE PRINTING CORPORATION

## 01. பிரதிப் பொது முகாமையாளர் பதவி (HM 1-3)(பதவி 01)

**தொழில் விபரம்**

பிரதிப் பொது முகாமையாளரானவர் கூட்டுத்தாபனத்தின் ஒட்டுமொத்த நிர்வாகம் மற்றும் நிதிக் கட்டுப்பாட்டில் பொது முகாமையாளருக்கு உதவுவதற்கு பொறுப்பாவார், கூட்டுத்தாபனத்தின் அனைத்து நடவடிக்கைகள், முகாமைத்துவ மற்றும் மூலோபாய செயற்பாடுகளில் ஈடுபடுதல், வருவாயை அதிகரிக்கும் நோக்குடன் உற்பத்தியை அதிகரிக்கும் திட்டங்களை வகுத்தல் மற்றும் நேரடி செயற்பாடுகளில் ஈடுபடுதல், பொது முகாமையாளர் இல்லாத நிலையில் பணிப்பாளர்கள் சபைக்கு கொள்கை விடயங்களில் ஆலோசனை வழங்கல் மற்றும் தொடர்புடைய நிறுவனங்கள் மற்றும் உள்ளகக் குழுக்களின் செயற்பாடுகள் இடையே ஒருங்கிணைந்த செயற்பாடுகளுக்கு சர்வதேச நிறுவனங்களுடன் தொடர்புபட்டு பணியாற்றுதல்.

**தகைமைகள்**

***கல்வி: (வெளிவாரி)***

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து பௌதீக விஞ்ஞானத்தில் இளமாணிப் பட்டம் ஒன்று மற்றும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் இருந்து பட்டப் பின்படிப்பு (முதுமாணி) தகைமை ஒன்று அல்லது அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை நிறுவனம் ஒன்றில் கூட்டு அங்கத்துவம் அத்துடன் முகாமைத்துவ மட்டத்தில் குறைந்தது பதினெட்டு (18) ஆண்டுகள் அனுபவம் அதில் பாரிய அளவான அச்சு நிறுவனம் ஒன்றில் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் ஐந்து (05) ஆண்டுகள் அனுபவம்.

***(உள்ளக)***

சிரேஷ்ட முகாமையாளர் பிரிவில் குறைந்தது மூன்று (03) ஆண்டுகள் திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருப்பது இந்தப் பதவிக்கான தகுதியாகும்.

**ஆட்சேர்ப்பு முறை:** கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை

**வயது வரம்பு:**

35 வயதுக்கு குறையாதவராகவும் 55 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்ளக அபேட்சகர்களுக்கு உயர் வயதெல்லை பொருந்தாது.

**சம்பள அளவு:**

2027.01.01 இல் இருந்து செயற்படும்

HM 1-3-2025 ரூபா 52, 500/- 15 x 4,100 – 214,000/- (மாதாந்தம்)

2025.03.25 இன் 01/2025 ஆம் இலக்க முகாமைத்துவத் சேவை திணைக்கள சுற்றுநிருபத்தின்படி

| பிரதிப் பொது முகாமையாளர் பதவி (HM 1-3) | |
|---|---|
| **2026.01.01** | **2027.01.01** |
| **ரூபா 133,028** | **ரூபா 152,500** |

**ஏனைய நன்மைகள்:**

- PED 1/2015 (ii) ஆம் இலக்க சுற்றுநிருபத்தின்படி போக்குவரத்துக் கொடுப்பனவு

## 02. உதவி முகாமையாளர் பதவி (நிர்வாகம் மற்றும் மனித வள மேம்பாடு) (MM 1-1)(பதவி 01)

**தொழில் விபரம்**

நிறுவனத்தின் நிர்வாகம் மற்றும் மனித வள முகாமைத்துவத்தில் உதவிப் பணிகள் மற்றும் முறையான நிர்வாகம் மற்றும் மனிதவள கொள்கையை ஒழுங்குபடுத்தல் மற்றும் செயற்படுத்தலுக்கு பொறுப்புகளை முன்னெடுப்பதில் முகாமையாளருக்கு (நிர்வாகம் மற்றும் மனித வள மேம்பாடு) உதவுதல் மற்றும் அதிக ஊக்கமுடைய அறிவு மற்றும் திறன் கொண்ட தொழில்படையை உறுதி செய்யும் திட்டங்களை முன்னெடுத்தல்.

**தகைமைகள்**

***கல்வி (வெளிவாரி)***

அரச திணைக்களம்/ கூட்டுத்தாபனம்/ சபை அல்லது புகழ்பெற்ற வர்த்தக நிறுவனம் ஒன்றில் தொடர்புடைய துறையில் மூன்று ஆண்டுகள் (03) தகைமைக்கு பின்னரான அனுபவத்துடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து இளமாணிப் பட்டம்.

***(உள்ளக)***

தொடர்புடைய துறையில் கனிஷ்ட முகாமைத்துவப் பிரிவில் குறைந்தது ஐந்து (05) ஆண்டுகள் திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருப்பது இந்தப் பதவிக்கான தகைமையாகும்.

மேலுள்ளவை தவிர, JM பிரிவில் உள்ள மற்றும் வெளிவாரி அபேட்சகர்களின் தகைமையை பூர்த்தி செய்திருப்பது இந்தப் பதவிக்கான தகைமையாகும்.

**ஆட்சேர்ப்பு முறை :** கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை

**வயது வரம்பு :**

22 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்ளக அபேட்சகர்களுக்கு உயர் வயதெல்லை பொருந்தாது.

**சம்பள அளவு :**

2027.01.01 இல் இருந்து செயற்படும்

MM 1-1- 2025 ரூபா 91,690/- 10x2,480 - 15 x 3,450 – 168,240/- (மாதாந்தம்)

2025.03.25 இன் 01/2025 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைத் திணைக்கள சுற்றுநிருபத்தின்படி

| உதவி முகாமையாளர் (ADMIN & HRD) MM 1-1 | |
|---|---|
| **2026.01.01** | **2027.01.01** |
| **ரூபா 81,710** | **ரூபா 91,690** |

## 03. உதவி முகாமையாளர் பதவி (வேலைகள்) (MM 1-1) – மதிப்பீடு (பதவி 01)

**தொழில் விபரம்**

பாரிய அளவான அச்சு நிறுவனம் ஒன்றில் மூன்று ஆண்டுகள் (03) தகைமைக்கு பின்னரான அனுபவத்துடன் பல்கலைக்கழகம் மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து விஞ்ஞான பட்டம்.

**தகைமைகள்**

***கல்வி (வெளிவாரி)***

அரச திணைக்களம்/ கூட்டுத்தாபனம்/ சபை அல்லது புகழ்பெற்ற வர்த்தக நிறுவனம் ஒன்றில் தொடர்புடைய துறையில் மூன்று ஆண்டுகள் (03) தகைமைக்கு பின்னரான அனுபவத்துடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து இளமாணி பட்டம்.

***(உள்ளக)***

தொடர்புடைய துறையில் கனிஷ்ட முகாமைத்துவப் பிரிவில் குறைந்தது ஐந்து (05) ஆண்டுகள் திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருப்பது இந்தப் பதவிக்கான தகைமையாகும்.

மேலுள்ளவை தவிர, JM பிரிவில் உள்ள மற்றும் வெளிவாரி அபேட்சகர்களின் தகைமையை பூர்த்தி செய்திருப்பது இந்தப் பதவிக்கான தகைமையாகும்.

**ஆட்சேர்ப்பு முறை :** கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை

**வயது வரம்பு:**

22 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்ளக அபேட்சகர்களுக்கு உயர் வயதெல்லை பொருந்தாது.

**சம்பள அளவு:**

2027.01.01 இல் இருந்து செயற்படும்
MM 1-1- 2025 ரூபா 91,690/- 10x2,480 - 15 x 3,450 – 168,240/- (மாதாந்தம்)
2025.03.25 இன் 01/2025 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைத் திணைக்கள சுற்றுநிருபத்தின்படி

| உதவி முகாமையாளர் (ADMIN & HRD) MM 1-1 | |
|---|---|
| **2026.01.01** | **2027.01.01** |
| **ரூபா 81,710** | **ரூபா 91,690** |

**மேல் குறிப்பிடப்பட்ட மூன்று பதவிகளுக்கும் பொதுவாக பொருந்துபவை பின்வருமாறு**

**சேவை நிபந்தனைகள்:**

மேலுள்ள பதவி நிரந்தரமானது மற்றும் 03 ஆண்டுகள் தகுதி காண் காலத்தைக் கொண்டதாகும்.

முந்தைய பதவியில் ஏற்கனவே உறுதி செய்யப்பட்ட உள்ளக அடிப்படையில் தேர்வுசெய்யப்படும் பணியாளர்கள் ஓர் (01) ஆண்டு பதில் காலத்தை கொண்டதாக நியமனம் அமையும்.

**ஏனைய கொடுப்பனவுகள்:**

சம்பளத்திற்கு மேலதிகமாக பதவிக்காக பின்வரும் கொடுப்பனவுகள் பொருந்தும்.

- சுற்றுநிருபங்களின்படி அரசு அங்கீகரித்த கொடுப்பனவுகள்
- வருகை ஊக்கத்தொகை
- உணவு கொடுப்பனவு

**ஏனைய மேலதிக நன்மைகள்:**

- ஊழியர் மற்றும் குடும்பத்தை உள்ளடக்கிய மருத்துத் திட்டம்
- KPI அடிப்படையில் ஊக்க முறை
- EPF மற்றும் ETF
- பயன்படுத்தப்படாத விடுப்புகளை பணமாக்கல்

**விண்ணப்பித்தல்**

- 2026.02.02 இற்கு தொடர்புடைய தகைமைகளை பூர்த்தி செய்யும் விண்ணப்பதாரர்கள் தகைமையை நிரூபிக்கக் கூடிய கல்வித் தகைமைகள், தொழில்முறை தகைமைகள், வேலை அனுபவம் மற்றும் பிறப்புச் சான்றிதழ் ஆகிய சான்றிதழ்களின் உறுதி செய்யப்பட்ட பிரதிகளுடன் தமது விண்ணப்பத்தை சமர்ப்பித்தல் வேண்டும். மேலுள்ளவற்றுக்கு பொருந்தாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். அரச/ பொது நிறுவனம்/ கூட்டுத்தாபனம்/ சபைகளில் ஏற்கனவே சேவையில் உள்ளவர்கள் தமது விண்ணப்பங்களை குறித்த நிறுவனங்களின் தலைவர்கள் ஊடாக அனுப்புதல் வேண்டும்.
- விண்ணப்பத்தைக் கொண்ட கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிடுதல் வேண்டும்.
- ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிப்பதாயின், ஒவ்வொரு பதவிக்கு வெவ்வேறு விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் வேண்டும்.
- அனைத்து விண்ணப்பங்களையும் 2026.02.02 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைப்பதற்கு ‘‘தலைவர், அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம், பனாலுவ, பாதுக்க’’ என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புவது அல்லது கைகளால் சேர்த்தல் வேண்டும்.
- இங்கு குறிப்பிடப்படாத வேறு ஏதேனும் விடயம் இருந்தால், ஆட்சேர்ப்பு தொடர்பான தகுதிவாய்ந்த நிர்வாகம் அவ்வாறான விடயங்களில் முடிவு எடுக்கும். எந்த வகையான ஆதரவு திரட்டலும் தகுதி இழப்பாக அமையும்.

**தலைவர்**
**அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்,**
**பனாலுவ,**
**பாதுக்க.**